
# தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுதல்



ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.

தற்போதைய பதிப்பு: 2024

**தகவல் தொடர்புக்கு**

All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

**தொலைபேசி:** +91-80-25452617
**மின்னஞ்சல்: bookrequest@apcwo.org**
**இணையதளம்: apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்" என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**

**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil — Giving Birth to the Purposes of God )

# தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுதல்

# பொருளடக்கம்

அறிமுகம்

1. “மரியாளுக்கு நடந்த அற்புதத்திலிருந்து” கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் 1

2. உங்களுக்குள் வைத்திருக்கும் வைப்பு 10

3. ஜெபத்தின் மூலம் பிறப்பித்தல் 16

4. பேசப்படும் வார்த்தை 21

5. ஜாக்கிரதையாகப் பணி செய்தல் 24

# அறிமுகம்

தேவன் பூமியில் தம்முடைய நோக்கங்களை வெளியிட விரும்பியபோதெல்லாம், அவர் தேவதூதர்களைப் பயன்படுத்திய நேரங்கள் உண்டு என்று வேதாகமம் வெளிப்படுத்துகிறது. ஆனால் பெரும்பாலும், அவர் அவற்றை மனிதர்கள் மூலம் வெளியிடுகிறார். அதாவது, உங்களையும் என்னையும் போன்றவர்கள் மூலம் அவரது நோக்கங்கள் பூமியில் வெளியிடப்படுகின்றன என்பதே இதன் அர்த்தமாகும்.

நீங்கள் தேவனுடன் நடக்கும்போது, அவர் உங்கள் மூலம் இந்தப் பூமியில் வெளியிட விரும்பும் திட்டங்களையும் நோக்கங்களையும் கண்டுகொள்வீர்கள். இவற்றில் சில _ ஒரு கன்னிகையின் மூலம் தேவனுடைய குமாரன் பிறத்தல் சம்பவத்தைப்போல மிக விசேஷமானதாகவும், வேறு சில, யாரும் கேள்விப்பட்டிராத ஒன்றான _ தொலைதூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் மழலைப் பள்ளியை அமைப்பது என்பது போன்று அவ்வளவு விசேஷித்த ஒன்றாக இல்லாமலும் இருக்கலாம். இருப்பினும், இவை ஒவ்வொன்றும் பூமியில் வெளியிடப்பட்ட தேவனுடைய பணியாகும்.

இந்தப் புத்தகம் பூமியில் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதைக் குறித்த சில மதிப்புமிக்க ஆழமான புரிதலைக் கொண்டுள்ளது. எனவே, உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய பணிகளை வெளியிடத் தொடங்குங்கள்!

தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆசிஷ் ராய்ச்சூர்

# 1

# “மரியாளுக்கு நடந்த அற்புதத்திலிருந்து” கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்

**ஏசாயா 7:14**

**ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.**

“மரியாளின் அற்புதத்தை” நீங்கள் கருத்தில் கொள்ளும்போது, தேவனுடைய பணியை பூமியில் வெளியிடுதல் பற்றிய ஆழமான புரிதல் சிலவற்றை இங்கே காணலாம்.

## குறித்த காலத்தில் பூமியில் வெளியிடப்படுகிறது

தேவனுடைய குமாரன் இவ்வுலகில் பிறப்பதைக் குறித்த தேவ திட்டம் ஏதேன் தோட்டத்திலேயே முன்னறிவிக்கப்பட்டது. *“உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்”* (ஆதியாகமம் 3:15). ஏசாயா போன்ற தீர்க்கதரிசிகளும் இன்னும் பலரும் அவருடைய வருகையைப் பற்றி முன்னறிவித்தனர். ஆனாலும், இரட்சகரை உலகிற்குள் அனுப்ப தேவன் அவசரப்படவில்லை என்பதை நாம் பார்க்கிறோம். தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டு, ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்குப் பிறகு, *“காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன்*

*அனுப்பினார்”* (கலாத்தியர் 4:5) என்று வேத வாக்கியம் சொல்கிறது. தேவன் எப்பொழுதும் தமது கிரியையைக் குறித்த காலத்தில் பூமியில் வெளியிடுகிறார். தேவன் உங்கள் மூலம் வெளியிட விரும்பும் ஒவ்வொரு கிரியையும் குறித்த காலத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

## சாதாரண ஜனங்கள் மூலமாக வெளியிடப்படுகிறது

தேவன் தம்முடைய குமாரனை உலகத்திற்குள் அனுப்ப விரும்பியபோது, மரியாள் என்று அழைக்கப்பட்ட, ஒரு இளம் யூதப் பெண்ணான கன்னிகையைத் தேர்ந்தெடுத்தார். தேவன் செய்ய இருந்த மிக முக்கியமான வேலையானது - அதாவது, உலக இரட்சகரை இப்பூமிக்கு அனுப்புதலாகிய வேலை - ஒரு இளம் கன்னிகையினிடத்தில் ஒப்படைக்கப்பட்டது என்பதை சிந்தித்துப் பார்த்தல் மிகவும் அற்புதமானது. தேவன் எவ்வளவு பெரிய சவாலை எதிர்கொண்டார்! மரியாளின் வயிற்றில் கருவுற்றிருந்த குழந்தைக்கு ஏதாவது நேர்ந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? மரியாள் குழந்தையை கருக்கலைப்பு செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்? அவளுக்கு கருச்சிதைவு ஏற்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? அந்தக் காலகட்ட வரலாற்றில் மிகவும் சாத்தியமான ஒரு சம்பவத்தின்படி _ அவள் கல்லெறிந்து கொல்லப்பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்? அப்படியானால், உலக இரட்சகருக்கு என்ன நடந்திருக்கும்? மனிதகுலம் என்ன ஆகியிருக்கும்? தோல்விக்கான அனைத்து சாத்தியக்கூறுகளும் இருந்தபோதிலும், ஒரு இளம் கன்னிகையிடம் மிகப்பெரிய பணியை ஒப்படைக்கும் சவாலை தேவன் எடுத்தார். தேவனால் இதை ஒப்படைக்க முடியுமானால், நிச்சயமாக அவர் மற்ற எந்தப் பணியையும் - சுவிசேஷத்தை பலருக்கும் எடுத்துச் செல்வது, வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துவது, சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பது, தேசங்களைக் குணப்படுத்துவது என்பன போன்ற பல பணிகளை

உங்களையும் என்னையும் போன்றவர்களிடம் ஒப்படைக்க முடியும். தேவன் தமது பணியை சாதாரண ஜனங்களிடத்தில் ஒப்படைக்க பயப்படுவதில்லை. உண்மையில், தேவன் பூமியில் தமது பணியை சாதாரண மக்கள் மூலம் வெளியிடுவதையே தெரிந்தெடுத்திருக்கிறார்.

## பாவமில்லாதவராய் — முற்றிலும் அவருடைய ஆவியால் பிறக்க வேண்டும்

மரியாளின் வயிற்றில் தேவ குமாரன் கருவுற்றது ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியை; அது முற்றிலும் பரிசுத்த ஆவியானவரால் செய்யப்பட்ட ஒரு கிரியையாகும். கருவுருதல் ஒரு மனுஷியினுடைய வயிற்றில் நடந்தாலும், அது ஒரு அதிசயத்தினால் நடந்தது. கருவுறுதல் நிகழ்ந்தபோது மனிதனுடைய தொடர்பு எதுவும் அங்கு இல்லை. தேவதூதன் மரியாளிடம், *"பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்"* (லூக்கா 1:35) என்று கூறினான். தேவன் நம் மூலம் வெளியிட விரும்பும் ஒவ்வொரு பணியும் அவருடைய ஆவியிலிருந்து பிறக்க வேண்டும். அது நமது இயற்கையான திறன் மற்றும் ஆற்றலின் மூலம் வெளியிடப்படும் என்றாலும், அது ஆவியானவரால் கருத்தரிக்கப்பட வேண்டும். *"மாம்சத்தினால் பிறப்பது (கருவுற்றது) மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது (கருவுற்றது) ஆவியாயிருக்கும்"* (யோவான் 3:6). மனுஷனுடைய பகுத்தறிவு, கற்பனை அல்லது புதிய யோசனை மூலம் ஒரு பணியை பிரத்தியேகமாக உருவாக்கிவிட முடியாது, அந்தப் பணி எவ்வளவு ஆவிக்குரியதாகத் தோன்றினாலும் அது தேவனுடைய உண்மையான கிரியையாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அந்தக் கிரியை பரிசுத்த ஆவியானவரால் துவங்கப்படவில்லை என்றால், அது

மிகவும் ஆவிக்குரியதைப்போலத் தோன்றினாலும் மாம்சத்தின் கிரியையாகவே இருக்கும். தேவன் மாம்சத்தின் கிரியையை அபிஷேகம் பண்ணமாட்டார் (யாத்திராகமம் 30:32).

## சங்கடத்தை சந்திப்பதற்குக் காரணமாய் இருக்கலாம்

உலக இரட்சகர் மனுஷியாகிய தன் மூலமாகப் பிறக்க தான் ஒரு பாத்திரமாகத் திகழ்ந்தது மரியாளுக்கு எவ்வளவு கனத்துக்குரிய விஷயம்! ஆனாலும், அவள் எவ்வளவு ஒரு இக்கட்டான நிலையில் நிறுத்தப்பட்டாள். இங்கே அவள், திருமணமாகாத ஒரு இளம் பெண்ணாக இருந்து கருவுற்றாள். ஆம், அவள் தேவ குமாரனை கருவில் சுமந்துகொண்டிருந்தாள், ஆனால் அவளுடைய விளக்கத்தை அவளது குடும்பத்தினரும் நண்பர்களும் ஏற்றுக்கொண்டார்களா? பரிசுத்த ஆவியானவரின் கிரியையால் தான் கர்ப்பமாகிவிட்டதை அவள் அவர்களுக்கு விளக்கியபோது, அவர்கள் அவளை நம்பினார்களா? தேவன் மரியாள் மூலமாக தேவ குமாரனை “பிறப்பிக்க” விரும்பியபோது, அவர் மரியாளை ஏன் இப்படி ஒரு சங்கடமான சூழ்நிலைக்குள் தள்ள வேண்டியிருந்தது?

இதிலிருந்து நாம் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பாடம் இருக்கிறது. தேவன் நம்மிடம் ஒப்படைத்த பணியை நாம் தொடர்ந்து செய்யும்போது, அந்த வேலை நமக்கு சங்கடம் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம். தேவன் நமக்குள்ளும் நம் மூலமாகவும் என்ன செய்கிறார் என்பதை எல்லோருமே புரிந்துகொள்ள மாட்டார்கள். அவருடைய பணியைச் செய்ததற்காக நாம் இகழப்பட்டு நிராகரிக்கப்படலாம். நமது “மாம்சீகம்” மரிக்கும் வகையில், நாம் அடிக்கடி இதைக் கடந்து செல்லும்படி தேவன் அனுமதிக்கிறார். இதன் மூலம் நாம் சிறுகவும், தேவ குமாரன் பெருகவும் முடியும். கர்த்தராகிய இயேசுவின் சாட்சியைக்

குறித்தும் அவர் நம் மூலமாகச் செய்துகொண்டிருக்கிற கிரியையைக் குறித்தும் நாம் வெட்கப்படாமல் இருக்கக் கற்றுக்கொள்கிறோம்.

தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியை பெரும்பாலும் சாதாரணமான, இயற்கையான செயல்முறைகள் மூலம் வெளியிடப்படுகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் மரியாளின் வயிற்றில் பிள்ளை கருவுற்றாலும், அந்தக் காலகட்டம் முழுவதிலும் அவள் பிள்ளையை சுமக்க வேண்டியிருந்தது. தேவன் ஏன் - கருத்தரித்தல், கர்ப்பகாலம் மற்றும் பிரசவம் - ஆகிய முழு செயல்முறையையும் ஒரு அதிசய நிகழ்வாக செய்யவில்லை? முதல் நாள் கருவுற்று மறுநாளே குழந்தையாகப் பிறந்திருந்தால் அது மிகப்பெரிய அதிசயமாக இருந்திருக்கும் அல்லவா? கர்ப்ப காலகட்டம் முழுவதிலும் குழந்தையை சுமக்கும் இயல்பான இயற்கையான செயல்முறையை மரியாள் ஏன் கடந்துசெல்ல வேண்டும்? இங்கு நாம் கற்றுக்கொள்ளும் முக்கியமான பாடம் என்னவென்றால், தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையானது பூமியில் சாதாரணமான இயற்கையோடிணைந்த செயல்முறைகள் மூலமாகவே செயல்படுத்தப்படுகிறது. உதாரணத்திற்கு, ஒரு வலுவான உள்ளூர் திருச்சபையை எழுப்ப தேவன் உங்களை அழைத்திருக்கலாம். அவர் உங்கள் மூலம் வெளியிட விரும்பும் கிரியையாக அது இருக்கலாம். அதற்காக உங்களை அபிஷேகித்திருக்கலாம் மற்றும் வரங்களை வழங்கியிருக்கலாம். ஆனாலும், உள்ளூர் திருச்சபையைக் கட்டியெழுப்பும்படி கடினமாக உழைத்தல், போதித்தல், பிரசங்கித்தல், பராமரித்தல், திட்டமிடுதல் மற்றும் ஒழுங்கமைத்தல் போன்ற இயல்பானதும் இயற்கையானதுமான செயல்முறையை நீங்கள் கடந்து செல்ல வேண்டியிருக்கும். உங்களது இயல்பானதும் இயற்கையானதுமான முயற்சியின் மூலம் மட்டுமே தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியைகள்

வெளியிடப்படும்.

மற்றொரு உதாரணம் தெய்வீக வழங்கலில் இருக்கும். தேவனுடைய ஜனங்களாக, தேவன் நம்முடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வார் என்று நாம் நம்புகிறோம். தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வழங்கலை நாம் நம்புகிறோம். இருப்பினும், பல சந்தர்ப்பங்களில், தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வழங்கல் நம் சொந்தக் கைகளின் பிரயாசத்தின் மூலம் நம் வாழ்வில் வரும் என்பதை நாம் உணரத் தவறலாம். நாம் வேலை செய்ய வேண்டியிருக்கலாம், ஆனாலும், நமது தேவைகள் சந்திக்கப்படுதல் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றாக இருக்கும். உதாரணமாக, உங்களுக்கு ஒரு வேலை இருக்கிறது என்பதே ஒரு அதிசயமாக இருக்கலாம்! உங்கள் வேலையின் மூலம் உங்கள் தேவைகள் சந்திக்கப்படுதல் என்பது மிகவும் இயற்கைக்கு அப்பாற்பட்டதாகும்!

## மூடிய கதவுகளை சந்திக்க நேரிடலாம்

மரியாள் *“தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்”* (லூக்கா 2:7) என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது. பெத்லகேமில் எத்தனை சத்திரங்கள் இருந்தன என்பது நமக்குத் தெரியாது. மரியாளும் யோசேப்பும் பல சத்திரங்களில் நின்று விசாரித்துக்கொண்டிருந்தும், தங்களுக்கு ஒரு அறையைக் கண்டுபிடிக்க முடியாமல் இருந்ததை நாம் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஒருவேளை அவர்கள் ஒரே ஒரு சத்திரத்திற்குச் சென்று அங்கு தங்குவதற்கு அறைகள் தேடி இருக்கலாம், அறைகள் இல்லாததால், சத்திரக் காவலாளி அவர்களை ஒரு தொழுவத்துக்கு அழைத்துச் சென்றிருக்கலாம். இப்பிரபஞ்சத்தின் தேவன் தமது குமாரனின் பிறப்புக்காக ஒரே ஒரு அறையையாவது

இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் ஒதுக்கி வைத்திருக்கக் கூடாதா? மரியாளின் மனதில் ஓடியிருக்கும் எண்ணங்களை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? “தேவன் நமக்காக ஒரு அறையை வைத்திருப்பார் என்று நான் நம்புகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, நான் சுமக்கும் குழந்தை தேவனுடைய குமாரன். சத்திரத்தில் நமக்கு இடம் இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்” என்று அவள் நினைத்திருக்கலாம். ஆனாலும், குழந்தை எங்கு பிறக்க வேண்டும் என்று தேவன் விரும்பினாரோ, அந்த இடத்திற்கு அவர்கள் செல்லும் வரை, அவர்கள் தட்டிய ஒவ்வொரு கதவும் அவர்களுக்கு மூடப்பட்டது எவ்வளவு ஏமாற்றமளிக்கிறது. நம் வாழ்விலும், பூமியில் தேவனுடைய பணியை நிறைவேற்றச் செல்லும்போது, பல நேரங்களில் நாம் மூடிய கதவுகளை எதிர்கொள்ள நேரிடலாம். நாம் செய்யும் வேலை உண்மையானது அல்ல என்பது இதன் அர்த்தமல்ல. மூடிய கதவுகளானது, பணி எங்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ, அந்த இடத்திற்கு நாம் செல்லும்வரை நாம் தொடர்ந்து நகர்ந்துகொண்டே இருக்க வேண்டும் என்பதையும், மற்ற கதவுகளைத் தட்டிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதையும் குறிக்கிறது.

உண்மையிலேயே பரிசுத்த ஆவியானவரால் உண்டான தேவனுடைய உண்மையான கிரியைகளைத் தங்களது ஆவியில் கருத்தரித்திருக்கிற பலர் உள்ளனர். இருப்பினும், அவர்கள் தேவன் விரும்பும் இடத்திற்குச் செல்லும்வரை, அவர்களால் பிரசவிக்க - பெற்றெடுக்க முடியாது. அவர்கள் சென்றடைய வேண்டும் என்று தேவன் விரும்பும் இடத்திற்கு வந்து சேரும் வரை, பிரசவிப்பதற்கு “எந்த இடமும்” கிடைக்காமல் அவர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல வேண்டியிருக்கலாம். தேவனுடைய நோக்கங்கள் நம் மூலம் பிறப்பதற்கு முன்னரே நாம் சரியான இடத்தில் இருக்க வேண்டும்.

## பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்

ஒரு குழந்தையாக, மற்ற குழந்தைகளைப்போலவே இயேசுவும் வளர வேண்டியிருந்தது (லூக்கா 2:40). இயேசு பிறந்த முதல் நாளிலிருந்தே அவர் தமக்குத்தாமே உணவு உண்டு உடை உடுத்திக்கொள்ள ஆரம்பிக்கவில்லை! மாறாக, மரியாள் மற்ற தாய்மார்களைப்போலவே அவரைக் கவனித்துக்கொள்ளவும் பராமரித்து வளர்க்கவும் வேண்டியிருந்தது. உண்மையில், இயேசு குழந்தையாக இருந்தபோது, யோசேப்பும் மரியாளும் அவரது உயிரைப் பாதுகாக்கும்படி பெத்லகேமை விட்டு எகிப்து தேசத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது, ஏனெனில், ஏரோது ராஜா குழந்தை இயேசுவைக் கொலை செய்ய முயற்சித்தான் (மத்தேயு 2:12-16). மரியாளும் யோசேப்பும், “சரி, இவர் தேவனுடைய குமாரன்தானே. நிச்சயமாக, அவர் தமக்குத் தாமே புசிக்கவும், தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ளவும், கவனித்துக்கொள்ளவும் முடியும்” என்று சொல்லி குழந்தையாய் இருந்த இயேசுவை அவராகவே எல்லாவற்றையும் செய்துகொள்ளும்படி விட்டுவிடவில்லை. தேவனுடைய குமாரனைப் பெற்றெடுப்பது மட்டுமல்லாமல், அவரைப் பேணி, பராமரித்து பாதுகாக்கும் பொறுப்பையும் மரியாள் பெற்றிருந்தாள். இதைப்போலவே, தேவன் நம் மூலமாகப் பிறப்பிக்கும் பணிக்கு நாம் பொறுப்பாளர்களாக இருக்கிறோம். நம் மூலம் உருவாகும் ஒவ்வொரு பணியும் பராமரிக்கப்படவும், அக்கறையோடு பாதுகாக்கப்படவும் வேண்டும். ஒரு தாய் தனக்குப் பிறந்த குழந்தைக்கு உணவளித்து, போஷித்து, அக்கறையோடு பேணி, பாதுகாப்பதைப்போல, தேவன் நம் மூலம் பிறப்பிக்கும் வேலையை நாம் கவனித்து, பராமரித்துப் பாதுகாக்க வேண்டும். தேவன் நம் மூலமாக வெளியிட்ட பணியை பிசாசோ அல்லது தீய எண்ணம் கொண்ட ஜனங்களோ அழித்துவிட நாம் அனுமதிக்கக் கூடாது.

பின்வரும் அத்தியாயங்களில், தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றும் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள நான்கு கூறுகளை நாம் கருத்தில்கொள்வோம்.

# 2
# உங்களுக்குள் வைத்திருக்கும் வைப்பு

நமக்குள் நாம் வைத்திருக்கும் வைப்பு மூலம் தேவன் தம்முடைய நோக்கங்களை வெளியிடுகிறார்.

## நமக்குள் வைத்திருக்கும் வைப்புதான், நம் மூலம் என்ன பிறக்கிறது என்பதைத் தீர்மானிக்கிறது

**மத்தேயு 12:33-37**

**33 மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும்.**

**34 விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.**

**35 நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்.**

**36 மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**37 ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.**

*"நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான்"* (மத்தேயு 12:35). நமக்குள் இருந்து பிறப்பது நம்மில் இருக்கும் பொக்கிஷம் அல்லது நமக்குள் வைத்து வைக்கப்பட்டுள்ளவைகளைச் சார்ந்ததாக இருக்கிறது. நம் உள்ளத்தில் நல்ல காரியங்களை

வைத்திருந்தால் நாம் நல்லவற்றைப் பிறப்பிப்போம். நம் உள்ளத்தில் தீய காரியங்களை வைத்திருந்தால், நாம் தீயவற்றைப் பிறப்பிப்போம். நமக்குள் வைத்திருக்கும் வைப்புதான் நம் மூலமாகப் பிறப்பிக்கப்படுபவைகளின் தன்மையைத் தீர்மானிக்கிறது.

**மத்தேயு 7:15-20**

**15 கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.**
**16 அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?**
**17 அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்.**
**18 நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது.**
**19 நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்.**
**20 ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.**

இங்கே, இயேசு பரிசேயர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார். தாங்கள் "நல்ல கனிகளை" கொண்டிருந்தால், நிச்சயமாகவே மரமும் நல்லதாக மாறும் என்று பரிசேயர்கள் கருதினர். ஆனால் அந்தக் கருத்து, உண்மைக்கு மாறானது என்பதை இயேசு அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். மரம் நல்லதாக இருந்தால்தான் அதன் கனியும் நல்லதாக இருக்கும். மரத்தின் தன்மையே அது தரும் பழங்களைத் தீர்மானிக்கிறது. நமக்குள்ளே நாம் வைத்திருக்கும் வைப்புதான் நாம் தரும் கனியைத் தீர்மானிக்கும். நம் வாழ்வில் நாம் என்ன பிறப்பிப்போம் என்பதை அதுவே தீர்மானிக்கும். நமக்குள் உள்ளவைதான் நம் வாழ்வின் மூலம் நாம் எதைப் பிறப்பிக்கிறோம் என்பதைத் தீர்மானிக்கும். அதுபோலவே, தேவன் தம்முடைய கிரியைகளை, நாம் நமக்குள் வைத்திருப்பவைகளோடு சேர்த்து நம் மூலமாகவே

வெளியிடுகிறார். ஆகவே, நாம் ஏற்கனவே நமக்குள் வைத்திருப்பவைகளும், இனிமேல் நமக்குள் தொடர்ந்து வைக்கப்போகிற காரியங்களும் மிகவும் முக்கியமானவை.

## நமக்குள்ளே எவ்வாறு வைத்து வைக்கப்படுகிறது

### *தேவன் நம் வாழ்வில் காரியங்களை வைத்து வைப்பார்.*

**யோவான் 3:27**

**யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்.**

தேவனால் நம் வாழ்வில் பல விஷயங்களை வைத்து வைக்க முடியும். நாம், நமக்குள் வைத்திருப்பவைகள் அல்லது நமக்குள் உள்ள நல்ல பொக்கிஷம் தேவனால் நமக்குள் வைக்கப்பட்டவைகளாகும். நாம் பெற்றிருப்பவைகளுக்கான மூல ஆதாரம் அவர் ஒருவரே. தேவன் தெரிந்துகொண்டால், தற்போது நாம் பெற்றிராதவைகளான _ வரங்கள், அபிஷேகம் போன்ற மற்றும் பிற திறமைகளை _ அவரால் நமக்குள் வைத்து வைக்க முடியும்.

### *மற்றவர்கள் நம் வாழ்வில் பல காரியங்களை வைத்து வைக்க முடியும்*

**நீதிமொழிகள் 27:17**

**இரும்பை இரும்பு கருக்கிடும்; அப்படியே மனுஷனும் தன் சிநேகிதனுடைய முகத்தைக் கருக்கிடுகிறான்.**

நாம் யாருடன் தொடர்புகொள்கிறோமோ அவர்கள் நல்லவைகளையோ அல்லது தீயவைகளையோ நம் உள்ளத்துக்குள் திணித்துவிடுவார்கள். மோசே மற்றும் யோசுவாவுக்கு இடையேயான உறவை தேவனே

ஏற்படுத்தினார் என்பதை உபாகமம் புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம் (உபாகமம் 1:38). யோசுவாவினிடத்துக்குச் சென்று அவனைத் தலைவனாக்கும்படி தேவன் மோசேயிடம் சொன்னார் (எண்ணாகமம் 27:18-23). மோசே மீது இருந்த அபிஷேகம் யோசுவாவுக்குள் கடந்து வந்தது. மோசே யோசுவாவின் மேல் கைகளை வைத்ததால் ஞானத்தின் ஆவி யோசுவாவுக்குள் கடந்து வந்தது (உபாகமம் 34:9). ஒரு விஷயம் ஒருவரிடமிருந்து மற்றவருக்குள் கடந்துவந்து, அவர்களுக்குள் வைக்கப்படுகிறது. நல்ல பொக்கிஷங்கள் மற்றவர்கள் மூலம் நம் வாழ்விற்குள் வரலாம். எனவே, நாம் யாருடன் நேரத்தை செலவிட வேண்டும் என்பதை உணர்ந்து, அப்படிப்பட்ட நபர்களை மனப்பூர்வமாகத் தேர்ந்தெடுத்து, அவர்கள் நம் வாழ்வில் நல்ல விஷயங்களை வைப்பதற்கு இடமளிக்கலாம்.

## *நமது வாழ்வில் நாமே காரியங்களை வைத்துவைக்கலாம்*

**நீதிமொழிகள் 4:23**
**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.**

நம் வாழ்வில் நாம் எதைச் சேர்த்து வைக்க வேண்டும் என்பதை நாமே தீர்மானிக்க முடியும். தேவனுடைய வார்த்தையை வாசிப்பதன் மூலமும், குறிப்பிட்ட சிலருடன் நேரத்தைச் செலவிடுவதன் மூலமும், குறிப்பிட்ட சில பகுதிகளில் பயிற்சி பெறுவதன் மூலமும் நாம் ஒரு நோக்கத்தோடு விஷயங்களை உள்ளத்திற்குள் வைத்துவைக்கிறோம். நாம் நல்ல பொக்கிஷத்தை வைத்திருக்கும்போது, நல்ல விஷயங்களைப் பிறப்பிக்கக்கூடிய இடத்தில் நம்மை நிலைநிறுத்திக்கொள்கிறோம் அல்லது முன்னிறுத்துகிறோம்.

தேவன் நம் மூலம் வெளியிட விரும்பும் பணியை நாம் புரிந்துகொள்ளத் தொடங்கும்போது, அவற்றை நம் வாழ்வில் வைத்து வைக்க வேண்டும், அது தேவனுடைய பணியைப் பிறப்பிக்க உதவும்.

இதை நாம் அநேக வழிகளில் செய்யலாம்.

- நம் வாழ்விற்குள் வைப்பதன் மூலம் செய்யலாம்,
- இவற்றை நமக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய நபர்களுடன் நேரத்தைச் செலவிடுவதன் மூலம் செய்யலாம், அல்லது
- தேவையான பயிற்சியைப் பெறுவதன் மூலம் செய்யலாம்.

காரியங்களை நமக்குள் வைத்து வைக்கும்போதுதான் அவை வெளியே வெளிப்படும். நமக்குள் ஏற்கனவே வைத்து வைக்கப்படாத ஒன்றை நாம் வெளியே கொண்டுவர முடியாது. உதாரணமாக, நீங்கள் ஒரு போதகராக இருந்து, புதிதாக ஒரு திருச்சபையை ஸ்தாபித்திருந்தால், திருச்சபையானது வளரவும், விசுவாசிகள் எண்ணிக்கையில் பெருகவும், பலமுள்ள சபையாக மாறவும், தேவனுக்குப் பிரியமான விதத்தில் அந்தத் திருச்சபை இருக்கவும் வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இப்போது, இதைச் செய்ய நீங்கள் எப்படிப்பட்ட காரியங்களை உங்கள் உள்ளத்தில் வைத்துவைக்க வேண்டியுள்ளது என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். உங்களது உள்ளத்தில் தேவனுடைய வார்த்தையை அதிக அளவில் வைத்து வைக்க வேண்டும், தேவனுடைய அபிஷேகத்தை அதிக அளவில் கொண்டிருக்க வேண்டும், திருச்சபையை வழிநடத்தவும், சரியான முடிவுகளை எடுக்கவும், திருச்சபையை நன்றாக நடத்தவும், நிர்வாகத் திறன்களைப் பெற்றிருக்கவும் அதிக ஞானத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஆகையால், நீங்கள் வேத வார்த்தையைப் படிக்க வேண்டும், அபிஷேகத்தில்

பெருக வேண்டும், திருச்சபையை நிர்வகிப்பதைப் பற்றி நன்கு கற்றுக்கொள்ள வேண்டும், மேலும் சபையைப் பற்றிய காரியங்கள் உங்கள் மூலம் பிறப்பிக்கப்படுவதற்கு இவை அனைத்தையும் உங்கள் உள்ளத்தில் வைத்து வைக்க வேண்டும்.

# 3

# ஜெபத்தின் மூலம் பிறப்பித்தல்

நாம் ஜெபத்தின் மூலம் தேவனுடைய நோக்கங்களை நம் வாழ்வில் பிறப்பிக்கிறோம். ஜெபமானது காரியங்களைப் பிறப்பிக்கும் செயல்முறையாக இருக்கிறது, ஜெபத்தின் மூலம்தான் நாம் தேவனுடைய காரியங்களை பூமியில் உருவாக்குகிறோம்.

## ஜெபத்தில், தேவனுடைய நோக்கங்களைப் பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்கிறீர்கள்

**1 கொரிந்தியர் 2:9,10**

**9 எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.**
**10 நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்.**

**1 கொரிந்தியர் 14:2**

**ஏனெனில், அந்நிய பாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.**

தேவன் மனித இனத்திற்கான பொதுவான திட்டங்களையும் நோக்கங்களையும் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், அதோடு கூட, நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் சில விஷயங்களைத் திட்டமிட்டு ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார். *“ஏனெனில், நற்கிரியைகளைச்செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள்*

*சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்"* (எபேசியர் 2:10). நம்மில் பலருக்கு, நம் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்கள் என்னவென்று வெளிப்படையாகத் தெரியாமல் இருக்கலாம், கிட்டத்தட்ட அது ஒரு "மறைபொருள்" போல் காணப்படலாம். இருப்பினும், தேவ ஆவியானவர் தேவனுடைய மனதை அறிவார். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய அனைத்து ஆழமான காரியங்களையும் அறிந்திருக்கிறார், மேலும் அவர் தாமே தேவனாக இருக்கிறபடியால், தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் முழுமையாக அறிந்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் நமக்கு வெளிப்படுத்துவார். இது பெரும்பாலும் ஜெபத்தில் நடக்கும்.

## ஆவியில் நிறைந்து ஜெபிக்கும்போது, நீங்கள் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஜெபிக்கிறீர்கள்

அந்நியபாஷைகளில் ஜெபிப்பதன் மூலம் (அல்லது ஆவியில் நிறைந்து ஜெபிப்பதன் மூலம்) கிடைக்கும் ஒரு வல்லமை வாய்ந்த பலன் என்னவென்றால், நாம் "இரகசியங்களை" பேசி ஜெபிக்கிறோம். நாம் ஆவியில் நிறைந்து ஜெபிக்கும்போது, உண்மையிலேயே நம் சொந்த வாழ்க்கைக்காக தேவன் வைத்திருக்கும் திட்டங்களும் நோக்கங்களும் நிறைவேறும்படி ஜெபிக்கிறோம், அந்த நேரத்தில் அது ஒரு மறைபொருளாகவோ அல்லது நமக்கு மறைக்கப்பட்ட விஷயமாகவோ இருக்கலாம்.

தேவன் நம் மூலமாகப் பிறப்பிக்க விரும்பும் விஷயங்களை ஜெபத்தில் அவர் நமக்கு வெளிப்படுத்துகிறார். நாம் ஜெபிக்கும்போது, கருவுறுதல் நடைபெறுவதைப்போல தேவனுடைய திட்டங்கள் நம் வாழ்வில் உருவாகத்

துவங்குகின்றன, மேலும் தேவனுடைய நோக்கங்கள் நம் ஆவிகளில் கர்ப்பந்தரிக்கின்றன. நாம் ஆவியில் தொடர்ந்து ஜெபிக்கும்போது, ஆவி மண்டலத்தில் தேவனுடைய நோக்கங்களுக்கு நாம் வடிவம் கொடுக்கிறோம். பிறப்பு அல்லது பிரசவம் உடனடியாக நடந்திருக்காது. ஆனாலும் கருத்தரித்த தருணத்திலிருந்து பிரசவம்வரை, கர்ப்ப காலம் அல்லது வளர்ச்சியின் ஒரு காலம் என்ற ஒரு காலம் உண்டு - அது உள்ளான வளர்ச்சியும் கண்ணுக்குப் புலப்படாத மண்டலத்தில் அடையும் வளர்ச்சியுமாக இருக்கும். நாம் ஆவியில் ஜெபிக்கும்போது இதுதான் நடக்கிறது. ஒருவேளை நம் கண்கள் காணும்படியாக, எந்த ஒரு மாற்றத்தையும் நம்மால் பார்க்க முடியாமல் போகலாம், ஆனால் ஆவி மண்டலத்தில், தேவனுடைய நோக்கங்கள் வடிவமைக்கப்படுகின்றன மற்றும் உருவாக்கப்படுகின்றன, மேலும் அவை பூமியில் வெளியிடப்படும் நேரத்தை நெருங்குகின்றன. எனவே, நாம் ஒரு திட்டத்தையோ அல்லது ஒரு தரிசனத்தையோ பெற்றுக்கொள்ளும்போதும், தேவன் நம் மூலம் வெளியிட விரும்பும் விஷயங்களை நமக்கு வெளிப்படுத்தும்போதும், அவற்றிற்காக ஜெபிக்க நாம் நேரம் செலவிட வேண்டும். சரியான நேரத்தில், காலம் நிறைவேறும்போது, அவருடைய நோக்கங்கள் பூமியில் நிறைவேற்றப்படும்.

## ஜெபமானது உங்களது சித்தத்தை தேவனுடைய சித்தத்துடன் ஒத்துப்போகச் செய்கிறது

எபிரெயர் **5:7-9**

**7 அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,**

**8 அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு,**

**9 தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய**

**இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,**

**மத்தேயு 26:38,39,42**

**38 அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி,**
**39 சற்று அப்புறம்போய், முகங்குப்புறவிழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.**
**42 அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய்: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.**

தேவனுடைய குமாரன் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற உண்மையைப் புரிந்துகொள்வது என்பது நம் மனதிற்குக் கடினமான ஒரு காரியமாக உள்ளது. இருப்பினும், குமாரனுக்கு பிதாவின் மீது “தேவனுக்குப் பயப்படும் பயம்” அல்லது “தேவனிடத்தில் பயபக்தி” இருந்தது என்று வேதாகமம் நமக்கு வெளிப்படுத்துகிறது. கெத்செமனே தோட்டத்தில், இயேசு தாம் மரிக்க இருந்த தியாக மரணத்தை நேருக்கு நேர் சந்தித்தபோது, ஒரு வேதனை நிறைந்த ஜெப நேரத்தின் மூலமும் பெருமூச்சுடன் கூடிய அழுகைகளுடன் மன்றாடுவதன் மூலமுமே அவர் பிதாவின் சித்தத்துக்கு “சரி, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்று சொல்லக்கூடிய ஒரு நிலைக்கு வந்தார். அந்தத் தீவிரமான ஜெப நேரத்தின் மூலமாகவே, மரணம்வரை கீழ்ப்படியும்படி, அவருடைய சித்தம் பிதாவின் சித்தத்திற்கு ஏற்ப மிகச்சரியாக ஒத்துப்போனது. அதுபோலவே, நம் வாழ்விலும், அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு நம்முடைய சித்தம் முழுமையாக இசைந்து கொடுக்காத ஜெப நேரத்திற்குள் நாமும் அடிக்கடி பிரவேசிக்கக் கூடும். ஆனால், பிதாவின் பிரசன்னத்தில் ஜெப நேரத்தை செலவிடும்போது, பெரும்பாலும் நம்முடைய சித்தம் அவருடைய சித்தத்திற்கு

முழுமையாக ஒத்துப்போவதைப் பார்க்கலாம். “கர்த்தாவே, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்று சொல்லி ஜெபிக்கும் நேரத்திற்குள் நாம் வருகிறோம்.

ஆகவே, தேவனுடைய நோக்கங்கள் இயற்கை மண்டலத்தில் வெளியிடப்படுவதற்குத் தயாராகும் வரையில், கண்ணுக்குப் புலப்படாத உலகில் அவரது நோக்கங்களைப் பிறப்பிக்கவும், வடிவமைக்கவும், உருவாக்கவும் ஜெபமானது உதவுவது மட்டுமல்லாமல், நாம் பூமியில் அவரது நோக்கங்களை நிறைவேற்ற ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கும்படி, நம் சித்தத்தை பிதாவின் சித்தத்துடன் ஒத்துப்போகச் செய்யவும் உதவுகிறது.

# 4
# பேசப்படும் வார்த்தை

நாம் பேசும் வார்த்தைகள் யாவும் பெரும்பாலும் பூமியில் தேவனுடைய சித்தத்தையும் நோக்கத்தையும் செயல்படுத்தும் கருவிகளாக இருக்கின்றன. நம் வார்த்தைகள் நம் நிகழ்காலத்தை மட்டுமல்ல, எதிர்காலத்தையும் பாதிக்கின்றன மற்றும் வடிவமைக்கின்றன.

## தேவனுடைய நோக்கங்களால் உங்கள் வாழ்வில் அக்கினியைப் பற்றவைக்கும் வார்த்தைகளை வெளியிடுங்கள்

**யாக்கோபு 3:6**

**நாவும் நெருப்புத் தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!**

நாவானது "நெருப்பு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது; நாவானது அதிக அளவில் ஆதிக்கம் செலுத்தும் என்பதையே இது குறிக்கிறது. இந்த வசனமானது ஒரு "தீய" நாவின் - அதாவது, தீமையைப் பேசும் ஒரு நாவின் தாக்கத்தைப் பற்றிப் பேசுகிறது.

தீய நாவானது பாவத்தின் "உலகமாய்" இருப்பதைப்போலவே, நல்ல நாவு ஆசீர்வாதத்தின் "உலகமாய்" இருக்கிறது (யாக்கோபு 3:6). ஒரு தீய நாவு முழு சரீரத்தையும் கறைப்படுத்திவிடுகிறது, அதே சமயத்தில், நல்ல நாவு முழு சரீரத்தையும் ஆசீர்வதிக்கிறது. முக்கியமான செய்தி என்னவென்றால், நமது நாவு நம் முழு வாழ்வையும் பாதிக்கிறது என்பதுதான். நம் நாவு நமது வாழ்வின் ஓட்டத்தில்

தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நம் வாழ்வு நம்முடைய நாவின் “அக்கினியால் கொளுத்திவிடப்படுகிறது”. அது நாம் பேசும் வார்த்தைகளால் தாக்கத்திற்கு உள்ளாகிறது.

ஒரு தீய நாவு நெருப்பைக் கொளுத்திவிடுகிறது அல்லது நரக அக்கினியால் தூண்டிவிடப்படுகிறது. ஆனால் ஆசீர்வாதத்தின் “உலகமாகவும்” அபிஷேகத்தின் ஊற்றாகவும் இருக்கும் ஒரு நாவானாது தேவனாலும் அவருடைய வார்த்தையினாலும் மற்றும் அவருடைய ஆவியினாலும் “பற்றவைக்கப்படுகிறது”. இந்த நாவு முழு சரீரத்தையும் ஆசீர்வதிக்கும். இது தேவன் நமக்காக வைத்திருக்கும் ஆசீர்வாதங்களால் நம் வாழ்வை நிரப்புவதற்குப் பற்றவைக்கும் நாவாகும். இது பூமியில் தேவனுடைய நோக்கங்களை வெளியிடும் ஒரு நாவாகும்.

ஒரு நாவு அநீதி நிறைந்த உலகமாகவோ அல்லது ஆசீர்வாதத்தின் உலகமாகவோ இருக்கலாம். நாம் பேசும் வார்த்தைகள் மூலமாகத்தான் நாம் தேவனுடைய நோக்கங்களைப் பிறப்பிக்கிறோம். தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களைக்கொண்டு நமது வாழ்வின் போக்கை “அக்கினியால் பற்றியெரியச்செய்யும்” வார்த்தைகளை நாம் வெளியிட வேண்டும். நாம் தேவனுடைய காரியங்கள் நிறைவேறும்படியாகப் பேச வேண்டும்.

## தேவனுடைய வார்த்தையைப் பேசுவதன் மூலம் உங்கள் உலகத்தை வடிவமைக்கவும்

**எபிரெயர் 11:3**

**விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.**

இயற்கையானது ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து

உண்டாக்கப்பட்டது. காணப்படுகிறவைகள் அதரிசனமானவைகளிலிருந்து வந்தன. இயற்கையைப் பிறப்பிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கண்ணுக்குப் புலப்படாத பொருளானது அல்லது ஆவிக்குரிய பொருளானது தேவனுடைய பேசப்பட்ட வார்த்தையாகும். இவ்வாறு, தேவனுடைய வார்த்தைதான் இயற்கை மண்டலத்தில் உள்ள விஷயங்களை வடிவமைக்கிறது, உருவாக்குகிறது, பிறப்பிக்கிறது, சிருஷ்டிக்கிறது மற்றும் ஜீவனடையும்படியாகக் கொண்டுவருகிறது. தேவன் நமது வாழ்வில் அவருடைய வார்த்தையைப் பேசுவதற்கும், நம் வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்குமான அதிகாரத்தையும் திறனையும் நமக்கு அளித்திருக்கிறார்.

தேவன் தந்த கனவுகள், திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் உங்கள் வாழ்க்கையில் நிறைவேறும்படி பேசுங்கள்.

# 5

# ஜாக்கிரதையாகப் பணி செய்தல்

**நீதிமொழிகள் 10:4**
**சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்.**

**நீதிமொழிகள் 13:4**
**சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்.**

**1 கொரிந்தியர் 15:10**
**ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது.**

ஒரு நபர் தன் கனவுகளை இரத்தம், வியர்வை மற்றும் கண்ணீருடன் இணைக்கத் தயாராக இல்லாதவரை கனவுகள் நிஜமாகாது! தேவனுடைய நோக்கங்களைப் பிறப்பிக்க நம் சார்பில் அதிக பிரயாசம் தேவைப்படும்.

*“கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்”* (சங்கீதம் 126:5). நாம் முதலாவது “கண்ணீரோடே விதைக்க” தயாராக இல்லாதவரை, ஒருபோதும் “கெம்பீரத்தோடே அறுவடை” செய்ய முடியாது. தேவன் ஒரு தரிசனத்தையோ அல்லது சொப்பனத்தையோ நமக்குக் கொடுத்திருக்கலாம், ஆனால் அதை நிஜமாக்குவதற்கு நம் பங்கில் மிகக்கடினமான போராட்டமும் அர்ப்பணிப்புடனான முயற்சியும் தேவைப்படும். நாம் ஒரு செங்கலை மற்றொரு செங்கல் மீது வைத்துக் கட்டும்போது, எதிர்காற்று திடீரென வீசி, சில செங்கற்களை கீழே

தள்ளிவிடக் கூடும். ஆனால் நாம் அவற்றை மீண்டும் எடுக்க வேண்டும், மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும், மற்றும் தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டும். தேவனுடைய நோக்கங்களைப் பிறப்பிப்பதற்கு கொஞ்சம் விடாமுயற்சியுடன் கூடிய பிரயாசம் தேவைப்படும்.

தேவன் நம்மை வெறும் சொப்பனம் காண்பவர்களாக இருக்க அழைக்கவில்லை, மாறாக அவருடைய ராஜ்யத்திற்காக வேலை செய்யும் பணியாட்களாக இருக்கும்படி அழைத்திருக்கிறார். ஊழியப் பணியைப் பற்றி கனவு காண்பதில் மட்டுமே நின்றுவிடாமல், ஊழியப் பணியைச் செய்வதற்காக நாம் அழைக்கப்பட்டுள்ளோம். எல்லா சிரமங்களையும் சவால்களையும் கடந்து, தொடர்ந்து பணியாற்றுங்கள், அப்போது கனவு நிச்சயம் நனவாகும்.

நம் ஒவ்வொருவர் மூலமாகவும் தேவன் பிறப்பிக்க விரும்பும் நோக்கங்கள் உள்ளன என்று நான் நம்புகிறேன். “ஆண்டவரே, நான் மிகப்பெரிய கனவு கண்டேன், ஆனால் எதையும் சாதிக்கவில்லை” என்று சொல்லிக்கொண்டு பரலோகத்துக்குச் செல்லாதீர்கள். பூமியில் தேவன் நம் மூலமாகப் பிறப்பிக்க விரும்பிய அனைத்தையும் நாம் பிறப்பித்தோம் என்ற நிச்சயத்தை அறிந்து, நாம் பரலோகம் செல்ல வேண்டும்.

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், கைதேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்துக்கு ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள்

நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations** ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses—Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work—Its Original Design

புதியபுத்தகங்கள்தொடர்ந்துவெளியிடப்படுகின்றன.PDF,ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் கவுன்சிலிங்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் கவுன்சிலிங்கானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

**இளம் பிராய நடத்தை**

**பிறரோடு இணைக்கக் குறைபாடு**

**உறவுமுறை சவால்கள்**

**கல்வியில் பின்தங்கிய நிலை**

**தொழில் தொடர்பான பிரச்சினைகள்**

**குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்**

**பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்**

**நடத்தையில் சீர்கேடு**

**ஆளுமை குறைபாடு**

**உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்**

**மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி**

**மது / போதைப்பொருளுக்கு அடிமை**

**ஆவிக்குரிய போராட்டங்கள்**

**வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை**

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**வலைதளம்: chrysalislife.org**
**தொலைபேசி:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998
**மின்னஞ்சல்: counselor@chrysalislife.org**

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் ‘கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்’ ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "All Peoples Church"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு, கர்நாடகா 560043

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* ***apcwo.org/give*** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**


## DOWNLOAD THE FREE APP!

*Search for*

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

தேவன் பூமியில் தம்முடைய நோக்கங்களை வெளியிட விரும்பியபோதெல்லாம், அவர் தேவதூதர்களைப் பயன்படுத்திய நேரங்கள் உண்டு என்று வேதாகமம் வெளிப்படுத்துகிறது. ஆனால் பெரும்பாலும், அவர் அவற்றை மனிதர்கள் மூலம் வெளியிடுகிறார். அதாவது, உங்களையும் என்னையும் போன்றவர்கள் மூலம் அவரது நோக்கங்கள் பூமியில் வெளியிடப்படுகின்றன என்பதே இதன் அர்த்தமாகும்.

நீங்கள் தேவனுடன் நடக்கும்போது, அவர் உங்கள் மூலம் இந்தப் பூமியில் வெளியிட விரும்பும் திட்டங்களையும் நோக்கங்களையும் கண்டுகொள்வீர்கள். இவற்றில் சில _ ஒரு கன்னிகையின் மூலம் தேவனுடைய குமாரன் பிறத்தல் சம்பவத்தைப்போல மிக விசேஷமானதாகவும், வேறு சில, யாரும் கேள்விப்பட்டிராத ஒன்றான _ தொலைதூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் மழலைப் பள்ளியை அமைப்பது என்பது போன்று அவ்வளவு விசேஷித்த ஒன்றாக இல்லாமலும் இருக்கலாம். இருப்பினும், இவை ஒவ்வொன்றும் பூமியில் வெளியிடப்பட்ட தேவனுடைய பணியாகும்.

இந்தப் புத்தகம் பூமியில் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதைக் குறித்த சில மதிப்புமிக்க ஆழமான புரிதலைக் கொண்டுள்ளது. எனவே, உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய பணிகளை வெளியிடத் தொடங்குங்கள்!

All Peoples Church & World Outreach
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org